Registered as a News Paper in Sri Lanka மக்களின் 04 விலை ரூபா 4.00

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் இதழ்

நாதம்: 02 மார்ச் (09-03-1991) சனிக்கிழமை ஓசை 19

## குண்டுவீச்சைத் தவிர்க்க ஒலிபெருக்கியில் விளக்கம்?

(மானிப்பாய்)

மானிப்பாய் நியா சிலத்திற்கு அண்மையிலுள்ள கல்லூரிபொன்றில் ஒலிபெருக்கி ஒலிபெருக்கி மூலம் அறிவித்தல் ஒன்று விடப்பட்டது. மேற்குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. குறித்த பாடசாலையில் விளையாட்டுப் போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்த நேரம் போம்மர் ஒன்று வானில் வட்டமிட்டது. இதனைக்கண்ட ஆசிரியர் ஒருவர் ஒலிவாங்கியில் "இது விளையாட்டு (4 ஆம் பக்கம் பார்க்க)

# சீனத் தயாரிப்புப் படகுகள் கடற்படையில் இணைப்பு

## இஸ்ரேலிடம் கொள்வனவு நிறுத்தம்

(கொழும்பு)

சிறிலங்கா கடற்படை புதிதாக ஆறு படகுகளை இணைத்துக் கொள்ளவுள்ளது இவை வடக்கு - கிழக்கு கடல்களிலும் பாக்குநீரிணையிலும் ரோந்து நடவடிக்கைக்குப் பயன்படுத்தப்படும்.

நான்கு படகுகள் சீனாவிடமிருந்து கொள்வனவு செய்யப்படும் ஒவ்வொன்றும் 40லட்சம் அமெரிக்க டொலர் பெறுமதியான இந்தப் படகுகள் மூன்று மாதங்களுக்கிடையில் சிறிலங்கா கடற்படைக்குக் கையளிக்கப்படுமென இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார் இனிமேல் சிறிலங்கா இஸ்ரேலிடமிருந்து சுப்பர் டுவரா படகுகளைக் கொள்வனவு செய்யாதாம்.

சீனத் தயாரிப்பான இப்படகுகளில் நவீனரகப் பீரங்கிகள் பொருத்தப்பட்டிருக்கும்.

சீனாவிடமிருந்து இதுவரை இரண்டு படகுகளை சிறிலங்கா வாங்கவுள்ளது. இரண்டு இறங்குகலங்கள்தான் இப்போது (4ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்காலத் தேர்தல் தவிர்க்கப்பட முடியாதது

- அத்வானி

(டில்லி)

இந்திய லோக்சபைக்கான இடைக்காலத் தேர்தல் தவிர்க்க முடியாதது என்று எதிர்க்கட்சித் தலைவர் எல். கே. அத்வானி கூறியுள்ளார்.

லோக்சபா பற்றிய ராஷ்டிரபதி ஆர். வெங்கட்ராமனின் பிரகடனம் நேற்று இரவுவரை (4 ஆம் பக்கம் பார்க்க)

## காங்கிரஸ் முயற்சியை தி. மு. க. எதிர்க்கும்

- கருணாநிதி

(சென்னை)

இந்திரா காங்கிரஸ் ஆட்சிக்கு வர எடுக்கும் முயற்சிகளை தி. மு. க. வன்மையாக எதிர்க்கும் என தி. மு. க. தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் முன்னாள் (4ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுவார்த்தை நடத்த புலிகள் முன்வர வேண்டும்

- டி. பி. விஜேதுங்கா

(கொழும்பு)

"வடக்குக் கிழக்கு மாகாணத்தில் நடைபெற்றுவரும் சண்டையை முடிவிற்குக் கொண்டுவர தமிழீழ விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தை நடத்த முன்வர வேண்டும்" என சிறிலங்கா பிரதமர் டி. பி. விஜேதுங்கா வேண்டுகோள்விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் பேசிய டி. பி. விஜேதுங்கா மேற்கூறிய வேண்டுகோளை விடுத்தார்.

பேச்சுவார்த்தைக்கான கதவுகள் திறந்திருக்கின்றன எனவும், ஜனநாயக வழியில் மக்களின் வாழ்த்தைப் (2ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்காவில் உள்ளூராட்சித் தேர்தல்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் உள்ளூராட்சித் தேர்தல்கள் வெகு விரைவில் நடைபெறும் (4 ஆம் பக்கம் பார்க்க)

## சிக்கன கடனுதவு சங்கத்தின் சர்வதேச மகளிர் தின விழா

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் ஒழுங்கு செய்த சர்வதேச மகளிர் தின விழா நேற்று காலை 10 00 மணியளவில் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

இவ் விழாவில் கூட்டுறவு அதிகாரிகள் மற்றும் விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியின் உறுப்பினர்கள் செல்வி சபீனா, செல்வி சின்னெல்லா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ் விழாவில் கூட்டுறவாளர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (ஈ)

## நிதிசேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

கருகம்பனை, மயிலங்கூடல் நிறைநிலா முதலுதவி நிலையத்தினர் நேற்றைய மகளிர் தின விழாவில் கலந்து கொண்டு நிதிசேகரித்து தென் தமிழீழ மக்களுக்கு அளித்தனர் இதற்கான நிதியினை அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்தனர்.

## மக்கள் கொல்லப்பட்டமை குறித்து அரச அதிபர் அதிர்ச்சி, கவலை

(யாழ்ப்பாணம்)

கடந்த மூன்று நாட்களில் முப்பதுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் யாழ் குடாநாட்டில் கொல்லப்பட்டுள்ளனர் என்றும், 80 பொதுமக்களுக்கும் மேல் படுகாயமடைந்துள்ளனர் என்றும், ஐம்பதிற்கும் அதிகமான பொதுமக்களின் வாழ்விடங்கள் நாசமாகிவிட்டன என்றும் கொழும்பில் தங்கியுள்ள யாழ். அரச அதிபருக்கு நேற்றுத் தெரிவித்தபோது அவர் ஆச்சரியமும், கவலையுமடைந்ததாக யாழ். செயலக பொதுசனத் தொடர்பு அதிகாரி எஸ். ஐ. நித்தியராஜ் கூறினார்.

நேற்றுக்காலை 11 மணியளவில் ரேடியோ தொலைத் தொடர்புசாதனம்மூலம் அவர் அரச அதிபருடன் தொடர்பு கொண்டார். அப்பொழுது அரச அதிபர் கடந்த காலங்களில் யாழ். குடாநாட்டிற்கு மாதாந்தம் ஐம்பது மில்லியன் (4ஆம் பக்கம் பார்க்க)

## திங்கள் முதல விலை 4. 50

தற்போதைய சூழ்நிலையில் பத்திரிகைக்கான, எல்பொருள் வகை மற்றும் அச்சுப் பொருள்களுக்கான விலை உயர்வு மக்கள் தினசரி வழாத்தையும் வெகுவாகப் பாதித்துள்ளது.

இதன் காரணமாக பத்திரிகையின் விலையை எதிர்வரும் 11ஆம் திகதி திங்கட்கிழமை முதல் ஐம்பது சதத்தால அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது வாசகர்கள் தொடர்ந்தும் ஒத்துழைக்குமாறு அன்புடன் வேண்டப்படுகின்றனர்.

(ஆ-ர்)

## வீரவணக்கம்

### அகிலன்

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு மங்கள ஓயாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சிறிலங்கா இராணுவத்துடனான மோதலில் அகிலன் வீரமரணம் அடைந்தார். இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவிக்கின்றனர்.

## திங்கள் சம்பளம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபன சகல ஊழியர்களினதும் சம்பளம் வரும் திங்கட்கிழமை 11ஆம் திகதி வழங்கப்படும் என நிர்வாக முகாமையாளர் வி. ரி. சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

இக் கொடுப்பனவுகள் தற்காலிகமாக நாவலர் வீதியில் இயங்கிவரும் காங்கேசன் சீமெந்துக் கூட்டுத்தாபன காரியாலயத்தில் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

## க. பொ. த. பரீட்சைகளுக்கு மன்னார், வவுனியா நகர்களில் இணைப்பு நிலையம் வேண்டாம்

- மகாசிவம்

(யாழ்ப்பாணம்)

மன்னார், வவுனியா மாவட்டங்களில் விசேட க. பொ. த. (சாதாரணம்), க. பொ. த. (உயர்தரம்) பரீட்சைகள் நடாத்தப்படும் போது, வினாத்தாள்கள் விநியோகம். விடைத்தாள் பொதிகளைச் சேகரிக்கும் இணைப்பு நிலையங்களை மன்னார்த் தீவு, வவுனியா நகருக்கு அப்பால் நிறுவும்படி இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் பரீட்சை ஆணையாளரைக் கேட்டுள்ளது.

வங்காலை அதிபர், ஆசிரியர்கள் இராணுவத்தால் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்டிருக்கும் உயிர்ப்பயம் காரணமாகவே அந்தப்பகுதி ஆசிரியர்கள் (4ஆம் பக்கம் பார்க்க)

## க. பொ. த. உயர்தர பரீட்சை எடுக்கும் இடம்பெயர்ந்து வந்தமாணவர் தொடர்பு கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

1990ஆம் ஆண்டு உயர்தர பரீட்சைக்காக ஏற்கனவே விண்ணப்பித்திருக்க வடக்கு கிழக்கில் உள்ள ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் தமது மாவட்டங்களில் பரீட்சைக்கு செய்ய முடியாது என எண்ணி யாழ். மாவட்டத்திற்கு வர விரும்பின் பரீட்சை நிலையங்களை தரவு நிரைப்படுத்தல் நிலைக்கு விண்ணப்பித்த பாடசாலை பரீட்சார்த்தியின் பெயர், சென்ற இடத்தில் பரீட்சை எழுத முடியாமைக்கான காரணம் யாழ் மாவட் (4ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்


**மில்க்வைற் சிதனப் பவுடர்**

மில்க்வைற் சிதனப் பவுடர் எண்ணெய்முழுக்குக்கென இயற்கைச் சாதனங்கள் கொண்டு தயாரிக்கப்பட்டது. பக்கெற் ஒன்று ரூ 1.50 மட்டுமே. இணுவில், திருநெல்வேலி யாழ்நகர் அண்ணா கோப்பிக்கடைகளிலும் விற்பனையாகிறது.

(B/2100)

**வெளிவந்துவிட்டது**

உலகத் தமிழர் குரல் தமிழ் எழுத்துச் சீரமைப்பு - சிறப்பிதழ். சகல புத்தகசாலைகளிலும் கிடைக்கும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் காலாண்டு இதழ்

(R 1162)


## தகவலுக்கு பத்து இலட்சம்

(கொழும்பு)

கொழும்பு ஹவ்லொக் வீதியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்திற்கு பொறுப்பானவர்களை கைது செய்வதற்கு தகவல்களைக் கொடுக்கும் எவருக்கும் 10 இலட்சம் ரூபாவினை பொலிஸார் சன்மானமாக வழங்குவர் என பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்

## பரீட்சார்த்த பயிர்ச்செய்கை

(யாழ்ப்பாணம்)

உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் பரீட்சார்த்தமான பயிர்ச் செய்கை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன.

நல்லூர், நீர்வேலி, தெல்லிப்பளை, அச்சுவேலி, சங்கானை, தென்மராட்சி மேற்கு ஆகிய பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் பரீட்சார்த்தமாக தமது பயிர்ச்செய்கைகளை ஆரம்பித்துள்ளன. (லோ)

## பத்திரிகை கற்கை நெறி

(யாழ்ப்பாணம்)

திறந்த பல்கலைக்கழகம் இதழியலில் (பத்திரிகைத் தொழில்) ஒருவருடக் கற்கை நெறியை ஆரம்பிக்கவுள்ளது. இதற்கான விண்ணப்பங்கள் மார்ச்மாத இறுதியில் கோரப்படவுள்ளன. உழைக்கும் பத்திரிகையாளர்களும் பத்திரிகைத் தொழிலில் ஆர்வம் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்.

ஒருவருட இதழியல் டிப்புளோமா கற்கை நெறியைத் தொடர்ந்து இதழியலில் பட்டப் படிப்புவரை ஆரம்பிக்கப்படவுள்ளது.

18 வயதுக்கு மேற்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம் என்றாலும், உழைக்கும் பத்திரிகையாளருக்கு முன்னுரிமை வழங்கப்படும் இக்கற்கை நெறி உதவியை ஏசியா பவுண்டேஷன் வழங்க முன்வந்துள்ளது.

## நிர்வாகசபை தெரிவு

நாயன்மார்கட்டு ஆயுர்வேத வைத்தியசாலையை புனரமைப்பது சம்பந்தமான கூட்டம் கடந்த வியாழன்று அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு நல்லூர் வட்டவைத் தலைவர் திரு. பூ. கணபதிப்பிள்ளை ஆசிரியர் அவர்கள் தலைமை தாங்கினார். புனரமைப்பு வேலைகளை மேற்கொள்வதற்காக ஒரு தற்காலிக நிர்வாகசபை ஒன்று தெரிவாகியது. திரு பூ. கணபதிப்பிள்ளை அவர்கள் தலைவராகவும், திருமதி கேசபாலரத்தினம் செயலாளராகவும், திரு. க. இரகுநாதன் பொருளாளராகவும், திரு. சுப்பிரமணியம் உபதலைவராகவும். திரு. சச்சிதானந்தம் உபசெயலாளராகவும். ஆ. முத்துக்குமாரு, தேசன், அ. மதியழகன், த. குமாரேஸ்வரன், குணமணி ஆகியோர் நிர்வாக சபை உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

## நாலாம் ஆண்டு நினைவஞ்சலி



**லெப்டினன்ட் உத்தமன்**
**(பூதப்பிள்ளை சிவக்குமார்)**
ஏழாலை

தாயின் மடியில்: **01. 08. 1966**
தாயக மண்ணில்: **08. 03. 1987**

ஏமாற்றி எங்களை நிர்க்கதி ஆக்கி
ஈழமண்ணை எப்படிக் கொக்கரித்துத்
தாமாரப் பரித்து வரும் படைகள் முற்றுந்
தலைமடியத் தரைப்படையாய் நின்றே மோதி
ஓயாப் போரதிசயங்கள் நிகழ்த்தி நாளும்
உலக சாதனை விளைக்கும் உயர் மாவீரர்
சீமான்கள் நிரலினிலே இடம் பெற்றிட்டாய்
சீராளன் உத்தமனே சிறக்க நின்பேர்

பதினேழு தான் வயசு கடந்த ஆண்டுப்
பரீட்சைக்காந் தருணம் அதை உதறித்தள்ளி
மதிமோசம் போய்த் தமிழர் இழந்து போன
மண்ணுரிமை மீட்பு ஜெயமடையா மட்டும்
உதிலென்ன எதிர்நோக்கம் எமக்கென்றோது
உரிமைப் போர்க்குயிர் கொடுத்த உத்தம நின்
அதிவேக விவேக மொன்றே மோதும் மந்தர்
அடிமை மதி கெடி கலங்க விரட்டுதற்கே;

"பத்தாம் புலம்"
ஏழாலை மேற்கு,
ஏழாலை.
(B-2113)

அவர் தம் பிரிவால் துயருறும்
தந்தை தாய், சகோதரர்
அக்கான்மார் அண்ணிமார்
மருமக்கள், பெறமக்கள்
நண்பர்கள், உறவினர்கள்

## அறிவித்தல்

கே. கே. எஸ் வீதி நாச்சிமார் கோவிலடி "ஷகி சலூன்" மறு அறிவித்தல் வரை மூடப்பட்டிருக்கும். நிலையம் மீண்டும் இயங்கத் தொடங்குவது பற்றி பத்திரிகைகளில் அறியத்தரப்படும்

(B-2119) - A. G. டாலி

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**சித்தாரம் சுப்பையா (ரவி)**

மலர்வு **16-12-1959**
உதிர்வு **07-02 1991**

அன்பிலே சிறந்தும் பண்பிலே உயர்ந்தும் அறிவுடையவனாய் வாழ்ந்தும் காட்டி அமரத்துவம அடைந்த உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்

நியூ சென்ரோ சைனீஸ் ரெஸ்ரோறன்ர்,
ஸ்ரீ வாலாம்பிகை கேப் சென்ரர்
ஊழியர்களும், நண்பர்களும்.

(B - 2118)

## நினைவு கூருகின்றோம்

**மார்ச் 9**

1986ஆம் ஆண்டு வீரமரணமடைந்த
❋ **பவ்வா** (தம்பாப்பிள்ளை மத்தக்குட்டி - பள்ளிக்குடியிருப்பு)

1987ஆம் ஆண்டு வீரமரணமடைந்த
**சிவா** (வே. சிவராசா குடமியன் - வரணி):

1988ஆம் ஆண்டு கொக்குவிலில் இந்திய இராணுவத்தினரின் சுற்றி வளைப்பின் போது வீரமரணமடைந்த
**சிவனேஸ்வரன்** (நாவற்குழி)
**ரவி** (கா. சண்முகராசா - திருநெல்வேலி)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

மண்ணுக்கடியில் உயிரின் மூச்சை
மறைத்தது போதும்
உள்ளம் திருந்தி
எழுமின்! எழுமின்!!

ஆயிரம் ஆயிரம்
கரங்களுயர்த்தி
நாமே நமக்கோர் கருவியாவோம்
எழுந்து வா!

(தி. உதயசூரியனின் 'அழைப்பின் துலங்கல்' என்ற கவிதையிலிருந்து)

❋ மேற்குறிப்பிட்ட மாவீரர் பவ்வா ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்ட மாவீரராவர்.

(B-2111) - விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி


## தாதிப் பயிற்சி நெறி

# DIPLOMA IN NURSING

**விண்ணப்பத் திகதி 10-3-91 வரைநீடிக்கப்பட்டுள்ளது**

I ஒன்றரை வருடகால பயிற்சி நெறி
II சர்வதேச தகைமையுடைய சான்றிதழ்
III அரசினர் வைத்தியசாலையில் செய்முறைப் பயிற்சிகள்
IV. அரச தொழில் வாய்ப்புக்கு ஏற்புடையது.

**சாயி மெடிக்கல் அக்கடமி**
(பதிவு செய்யப்பட்டது)
அதிபர்
இல: 6, பருத்தித்துறை வீதி,
(முதலாம் ஒழுங்கை, மாரவல்ஸ் அருகில்)
யாழ்நகர்.

(B 2112

## ✱ சிந்தனைக்கு ✱

பிறர் தவறுகளுக்கு நீ சமாதானங்கள் சொல்லலாம் ஆனால், உன் தவறுக்கு ஒரு போதும் சமாதானம் தேடாதே

— புப்லியஸ் ஸைரஸ்

ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 09-03-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ எண் 05

# ரஞ்சனின் இடத்தில் டி. பி. விஜயதுங்கா

சிறிலங்காவின் புதிய பாதுகாப்பு இணை அமைச்சராக பிரதம மந்திரியும் நிதி மந்திரியுமான டிங்கிரி பண்டா விஜயதுங்கா நியமிக்கப்பட்டுள்ளார். புதிய பாதுகாப்பு இணை அமைச்சர் விஜயதுங்கா கார்க்குண்டு வெடிப்பில் கொலைப்பட்ட அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னவின் முன் நிழலில் இருந்து செயற்பட்டவரே என கொழும்பிலுள்ள அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளார்கள். அதேவேளை சில அரசியலவதானிகள் இனப்பிரச்சினை தொடர்பான போக்கில் சிறிலங்கா அரசாங்கத்தில் சற்று மாறுபாடு ஏற்படலாம் எனவும் தெரிவித்துள்ளனர்.

இதனை உறுதிப்படுத்துமாப்போல் புதிய பாதுகாப்பு இணை அமைச்சர் டி.பி. விஜயதுங்கா பேச்சுவார்த்தைக்கு வருமாறு விடுதலைப் புலிகளுக்கு அழைப்பும் விடுத்துள்ளார். ஆனால், உண்மையில் டி.பி. விஜயதுங்கா புதிய பாதுகாப்பு இணை அமைச்சராக நியமிக்கப்பட்டு இருக்கின்றாரா என்பதில் பலத்த சந்தேகமே உள்ளது. அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னா காலத்தில் அரசியலில் வளர்ந்துவிட்ட இராணுவத்தின் செல்வாக்கை மட்டுப்படுத்தும் நடவடிக்கையின் வெளிப்பாடா இது எனவும், அல்லது நடவடிக்கைக்குரியவர் என்ற ரீதியிலான நியமனமா என்றும் சந்தேகங்கள் எழுந்துள்ளன.

முன்னாள் பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னா கடுங்கோட்பாட்டாளர் சிறு வயதில் இருந்தே அதிகார வர்க்கத்தின் சின்னமான தோட்டத்துரையாக இருந்துவந்த ரஞ்சன் விஜேரட்னா குறுகிய காலத்திற்குள்ளேயே சிறிலங்கா இராணுவத்தில் பெரும் செல்வாக்குப் பெற்றார். அதேவேளை இராணுவத்தின் காவலராகவும் ரஞ்சன் விஜேரட்னா வளர்ந்திருந்தார். அத்துடன் இராணுவத் தவறுகளையும் தனது பொறுப்பில் எடுத்துக் கொண்டார்.

1988, 1989 ஆம் ஆண்டுகளில் இராணுவத்தினாலும், ஆயுதப் படையினராலும் அறுபதாயிரத்துக்கு மேற்பட்ட சிங்கள மக்கள் கொல்லப்பட்டபோதும், 1990 ஆம் பிற்பகுதியில் ஆறாயிரத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டபோதும் இராணுவத்தின் செயற்பாட்டிற்கு அமைச்சர் ரஞ்சன் ஆதரவு நல்கி வந்தார். இதன் காரணமாக இராணுவத்தில் அமைச்சர் ரஞ்சனின் செல்வாக்கு வளர்ச்சி கண்டது. ஒரு பெரும் அரசியல் பின்னணியைக் கொண்ட ரஞ்சன் இராணுவத்திலும் பெரும் செல்வாக்குப் பெற்றார்.

அமைச்சர் ரஞ்சனின் அவ் வளர்ச்சியைச் சிறிலங்கா ஜனாதிபதிகூட விரும்பியிருக்கவில்லைப்போல் அவரின் இறுதிய நடவடிக்கைகள் அமைந்துள்ளன. இதனைப் புதிய பாதுகாப்பு அமைச்சரின் நியமனம் உறுதிப்படுத்துவது போல உள்ளது. புதிய பாதுகாப்பு இணை அமைச்சர் டி.பி. விஜயதுங்கா பலமான அரசியல் பின்னணியும்; சுயமாக இயங்கும் ஆற்றலையும் பெருமளவில் கொண்டவர் இல்லை என்பது அரசியல் அவதானிகளின் கருத்தாகும்.

ஆனால், டி.பி. விஜயதுங்காவின் நியமனம் சிறிலங்கா ஜனாதிபதியின் அரசியல் வட்டம் மேலும் குறுகி வந்துவிட்டதா என்ற சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளது. பிரதம மந்திரியாகவும், நிதி மந்திரியாகவும் இரு முக்கிய மந்திரிப் பதவி வகிக்கும் ஒருவரிடம் மேலும் பொறுப்புமிக்க மந்திரிப் பதவியை ஒப்படைத்தமையும், தனக்கு நெருங்கிய சகாவான சிறிசேனகூரேயிடம் ஐக்கிய தேசியக் கட்சி செயலாளர் பதவியை ஒப்படைத்ததும் இச் சந்தேகங்களை வலுவூட்டுவனவாயுள்ளன.

ஆனால், சிறிலங்கா ஜனாதிபதி எவரை எண்ணி புதிய பாதுகாப்பு அமைச்சரை நியமித்திருந்தாலும் சிறிலங்கா இராணுவத்தின் அரசியலில் ஆதிக்கம் இனிக் குறைவடையப் போவதில்லை. ஒரு "ஜனநாயக நாட்டில்" இராணுவத்திற்கு வழங்கப்பட முடியாத அதிகாரங்கள் பல சிறிலங்கா இராணுவத்தினரிடம் தற்பொழுது உள்ளது. மேலும் நெருக்கடிகள் வலுவடைந்து வரும் இவ்வேளையில், இராணுவத்தை எதிர்த்து நடவடிக்கைகளை அரசால் மேற்கொள்ள முடியாது. இதை வலியுறுத்துவதுபோல் புதிய பாதுகாப்பு இணை அமைச்சர் புலிகளைப் பேச்சுவார்த்தைக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ள வேளையில் இராணுவ வட்டாரங்கள் திட்டமிட்டவாறு இராணுவ நடவடிக்கைகள் தொடரும் என அறிவித்துள்ளன.

இந்நிலையில் சிறிலங்கா ஜனாதிபதியோ அன்றி புதிய அமைச்சரோ விரும்பினால்கூட அரசியலில் பலமான சக்தியாக வளர்ந்துவிட்ட இராணுவத்தின் அனுமதியின்றி பிரச்சனைகள் தீர்க்கப்பட முடியாத நிலை உருவாகி விட்டது என்பதே உண்மை.

# மோதிரத்தினால் அமைச்சர் ரஞ்சன் அடையாளம் காணப்பட்டார்

அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னா கொல்லப்பட்ட பாரிய குண்டு வெடிப்புச் சம்பவம் பம்பலப்பிட்டி பொலிஸ் பூங்கா சந்தியில் கடந்த சனியன்று - மார்ச் 2, 1991 காலை 8-30 மணியளவில் இடம்பெற்றது. இச்சம்பவம் கொழும்பு நகரையே குலுக்கியது. திம்பிரிகசேயாவில் தமது இல்லத்திலிருந்து மத்திய கொழும்பு ஹோட்டன் பிளேசிலுள்ள அவரது உத்தியோகபூர்வ வாஸ்தலத்துக்கு காலை உணவிற்காக வழமைபோல பேதிய பாதுகாப்புடன் அமைச்சர் சென்று கொண்டிருந்தார். அவர் சென்று கொண்டிருந்த ஜேர்மன் தயாரிப்பான மெர்சிடஸ் பென்ஸ் கார் பொலிஸ் பூங்காவருகே குண்டு வெடிப்பில் சிக்கிச் சிதறியது. பாதுகாப்பு அணியில் சென்ற இரு ஜீப் வண்டிகளும் சின்னாபின்னமாகின.

### பிரேமதாஸ திரும்பினார்

குண்டு வெடிப்புச் சம்பவ தினம் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாஸ அரசமுறைப் பயணம் ஒன்றை மேற்கொண்டு லண்டனில் இருந்தார். இச்சம்பவம் பற்றிய தகவல் உடனடியாக சிறிலங்கா ஜனாதிபதிக்கு தெரிவிக்கப்பட்டது. தனது பயணத்தை இடை நிறுத்திய பிரேமதாஸா ஹெலிகொப்டர் மூலம் அவசரமாக கொழும்பு திரும்பினார். கொழும்பு திரும்பிய ஜனாதிபதி முதல் வேலையாக பாதுகாப்பு அதிகாரிகளுடனும், உயர் மட்ட அரசுத் தலைவர்களுடனும் ஆலோசனை கலந்தார். தொடர்ந்தாற்போல் ஜனாதிபதி செயலகத்திலிருந்து விடுவிக்கப்பட்ட அறிக்கையின் வாசகங்களில், கொலை தொடர்பான புலனாய்வை மேற்கொள்ளுமாறு பொலிஸ் மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேராவுக்கு ஜனாதிபதி கட்டளை பிறப்பித்தார். அமைதியாக இருந்து புலனாய்வு நடைபெற உதவுங்கள் என்றும் பொது மக்களுக்கும் வேண்டுகோள் விடுத்தார்.

குண்டு வெடிப்புச் சம்பவம் நடந்த இடத்துக்கு ஜனாதிபதி பிரேமதாஸா, பொலிஸ் மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேரா, பிரதமர் டி.பி விஜெயதுங்க, இராஜாங்க அமைச்சர் ஏ.கே. ரணசிங்க ஆகியோர் சகிதம் பலமான பாதுகாப்புடன் சென்று பார்வையிட்டார். அவருடன் மந்திரிகளான வீரசிங்க மல்லிமாரட்சியும், ஏ.சி.எஸ். ஹமீதும் சேர்ந்து கொண்டனர். பின்பு திருமதி தேவாந்தி ரஞ்சன் அவர்களையும், வீட்டில் கூடியிருந்த உறவினர்களையும் சந்தித்து ஜனாதிபதி தனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொண்டார்.

### பாதுகாப்பு ஒழுங்குகள்

சம்பவத்தையடுத்து மத்திய புலனாய்வுத்துறை பிரதம எஸ்.பியான கொட்பிறி குணசேகரா சம்பவம் நிகழ்ந்த இடத்துக்கு தனது ஆளணியுடன் விரைந்தார். பொலிஸார் தயார் நிலையில் (RED ALERT) வைக்கப்பட்டனர். துமுல்லை சந்தியிலிருந்து பொலிஸ் பூங்கா வரையுள்ள ஹவ்லொக் வீதியும், சுற்றியுள்ள பகுதிகளும் இராணுவம், பொலிஸ்படை, கடற்படை என்பனவற்றின் பாதுகாப்புக்கு உட்படுத்தப்பட்டுச் சுற்றிவளைக்கப்பட்டது. வாகனங்களும், பாதசாரிகளும் பாதுகாப்பு வலயத்துக்குள் செல்ல அனுமதிக்கப்படவில்லை. களனிபாலம் உட்பட கொழும்பின் நுழைவாயில்களில் சோதனைச்சாவடிகள் அமைக்கப்பட்டு நகரிலிருந்து வெளியேறுபவர்கள் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்பட்டார்கள். வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, கொட்டாஞ்சேனை, இரத்மலானை, மருதானை ஆகிய பகுதிகளிலும் பொலிஸார் முற்றுகையிடுத்திடீர்ச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். காலையில் சம்பவத்தின் பிறகு முதன்முறையாக ஒரு தமிழ்ப் பெண்மணி கைதுசெய்யப்பட்டார். இதே வேளை பொலிஸ் தலைமையகப் பகுதி வீதியில் சென்று கொண்டிருந்த இரு தமிழர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். சனியன்று மாலைக்கிடையில் வீடுகளிலும், கடைகளிலும் தங்கியிருந்த சுமார் 45 தமிழர்கள் பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டனர். இவர்கள் சொந்த மண்ணை விட்டுச் சுமை வாழ்வதற்காகக் கொழும்பு வந்துள்ள அப்பாவித் தமிழர்.

### குண்டுவெடிப்பின் தாக்கம்

சம்பவத்தில் 80 கிலோ பாரமான பிளாஸ்டிக் (C 4) வெடிமருந்துள்ள கொண்ட பாரிய குண்டு வாகனம் ஒன்றில் வைக்கப்பட்டுத் தன்னியக்கக் கட்டுப்பாட்டு பெறிமுறையினை வெடிக்க வைக்கப்பட்டிருப்பதாக துறை சார்ந்த புலனாய்வாளர்கள் கூறினர். முன்பு புறக்கோட்டையில் வெடித்த குண்டையும் (35 கிலோ கிராம்), மருதானையில் வெடித்த (40 கிலோ கிராம்) குண்டுகளையும் விட இக்குண்டு சக்தி வாய்ந்ததாம். ஹவ்லொக் வீதிக்குண்டு சர்வமதப் பட்டதில் வளர்ச்சியாளர் பாவிக்கும் குண்டுகளின் தரத்தைச் சேர்ந்தது என்று கருதப்படுகிறது.

சம்பவம் நிகழ்ந்த இடத்தில் 20 அடிசுற்றளவுள்ளதான கிடங்கொன்று காணப்படுகிறது. குண்டின் அதிர்வலைகள் கொழும்புநகரைக் கலக்கியது. அமைச்சர் ரஞ்சன் பயணம் செய்த காரின் முன்பக்கம் (பொனற்) தந்திக் கம்பிகளில் சிக்கித் தொங்கும் அளவுக்கு குண்டு சக்தி மிக்கதாக இருந்தது. அமைச்சரின் பென்ஸ் கார், இரண்டு பாதுகாப்பு ஜீப் வாகனங்கள், ஒரு மினிபஸ் எட்டுக் கார்களை, பன்னிரண்டு மோட்டார் சைக்கிள்கள் முற்றாகச் சேதமடைந்தன. அச்சமயம் பாதை அருகே சென்று கொண்டிருந்த பேருந்துகளும் மற்றும் இலவசகங்களும் சேதமடைந்தன. 300 யார் தூரத்தில் தும்முல்ல சந்தியருகே சென்று கொண்டிருந்த பேருந்து ஒன்று திடீரென்று தீப்பற்றியது. இன காரணம் தெளிவாகத் தெரியவில்லை. பிரயாணிகள் பேருந்தை விட்டு இறங்கிப் பாதுகாப்புத் தேடி ஓடினர். கொழும்பு பல்கலைக்கழகம் இழுத்து மூடப்படாத நிலையிலிருந்து பெரும் பதற்றம் நிலவியது.

மனித உடலின் உறுப்புகள். தசைகள் 150 யார் சுற்றுச் சூழலுக்கும் அப்பால் உடைந்த கண்ணாடிகளின் கூரைகளிலும், வீடுகளிலும், பொலிஸ் மைதானத்திலும், வீதிகளிலும் சிதறி கிடந்தன. கருகிய நிலையில் சடலங்களும் முண்டங்களும் சம்பவம் நிகழ்ந்த இடத்தில் கிடந்தன.

★ ஹவ்லொக் வீதியில் 150 யார் தூரத்தில் அழகான சோலை அதனுள் அமைந்துள்ளது பிரபல சத்திர சிகிச்சை நிபுணர் யோகேஸ்வரனின் வீடு. அவர் ஜெயவர்த்தனபுர ஆஸ்பத்திரிக்குக் கடமைக்குக் கிளம்பும் நேரம் காலை 8 30. பூமி அதிர்ச்சியேற்பட்டது போல் அவரது வீட்டுத் தளபாடங்கள் தலைகீழாக மாறின. வீட்டுக்கூரைகள் நொறுங்கி சுழிந்து உடைந்தன. அவர் கூரையில் மனிதத் தலை ஒன்று வந்து விழுந்தது. பக்கத்திலே மரமென்றில் எலும்புத் துண்டு ஒன்று தொங்கியது. அதை முழங்கை எலும்பு என்று யோகேஸ்வரன் இனங்கண்டு கொண்டார். அவர் வைத்தியராயிற்றே!

★ டாக்டர் யோகேஸ்வரன் வீட்டுக்கு நேரெதிரே அமைந்துள்ளது நெல்சனின் வீடு. அவர் வீட்டு வளவில் முருங்கை மரக்கிளையொன்றில் ஒரு பெண்ணின் தலை காற்றில் ஊசலாடியது. நெல்சனின் வீட்டின் முன்பக்கம் அதிர்வினால் சாய்ந்துள்ளது.

★ ஆர் ரவீந்திரா என்பவர் ஒரு விளையாட்டுவீரர். சம்பவ தினம் காலை 500 யாருக்கு அப்பால் பாரசீக வளைகுடாச் செய்திகளைத் தினசரியொன்றில் படித்துக் கொண்டிருந்தார். குண்டின் அதிர்வைக் கேட்டதும், அமெரிக்கா ஸ்கட் ஏவுகணைத் தாக்குதல் என்று எண்ணினாராம். மேலே தந்திருப்பவை போன்ற உதாரணங்கள் பல.

சுருங்கக்கூறின், ஹவ்லொக் வீதியிலும், அதன் சுற்று வட்டாரத்திலும் குண்டின் அதிர்வலைகளால் பாதிக்கப்படாத வீடுகளும், கடைகளும் இல்லையெனலாம். அந்தப் பகுதி யுத்தம் நடந்த ஓய்ந்த இடம்போல் காட்சியளித்தது.

பாரிய குண்டு வெடிப்புச் சத்தம் ஒன்றைத் தொடர்ந்து தொடர்ச்சியாகச் சில குண்டு வெடிப்புச் சத்தங்களும் கேட்டதாக அப்பகுதி வாழ் மக்கள் தெரிவிக்கின்றனர். தொடர்ச்சியான இச் சம்பவங்கள் பெரிய அதிர்ச்சிகளையும், மனக் கிலேசத்தையும் ஏற்படுத்தியுள்ளதை அவதானிக்க முடிந்தது.

இது இப்படியிருக்க, தம்முடைய சொந்தங்களைத் தேடி விசாரிக்க அருகாமையில் பொலிஸ் வீதித் தடைகளையும் மீறி இறந்தவர்களை அடையாளம் காண்பதற்கு உடன் பிறப்புகள் முண்டியடித்தனர். பொலிசார் அவர்களைத் தடுத்து நிறுத்தினர். யார், யாரை அடையாளம் காண்பது? வீதியில் 300 யார் நீளத்துக்கு மனித சடலங்கள் சிதறிக் கிடந்தன.

### உயிரிழப்புகள்

அமைச்சர் ரஞ்சனின் சடலம் கருகிய நிலையில் அவர் பயணம் செய்த காரின் பாகங்களுக்குள் சிதைந்து கிடந்தது. இனம் கண்டு கொள்ள முடியாத நிலையில் காணப்பட்ட சடலத்தை ரஞ்சன் அணிந்திருந்த மோதிரத்தைக் கொண்டு அவர் சகோதரன் ஹேமச்சந்திரா அடையாளம் காட்டினார்.

மேலும் அமைச்சரின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த கார்ச் சாரதி, மெய்ப் பாதுகாவலர் சப் இன்ஸ்பெக்டர் விஜயகோனும் அமைச்சருடன் கூடவே இறந்து போயினர்.

இராணுவக் காப்ரல் ஆர்.பி பிரேமதாஸ் உட்பட இரு ஜீப் வண்டிகளில் வந்த விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த ஐந்து பேரும் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர்.

சம்பவத்தன்று 24 சிவிலியன்கள் இறந்துள்ளார்கள். இது உறுதியளிக்கப்பட்ட எண்ணிக்கையாகும். மேலும் சிலர் இறந்திருக்கலாம். கொழும்பு பொது ஆஸ்பத்திரியில் 22 பெண்களும் 51 ஆண்களும் பாரிய காயங்களுடன் தீவிர கண்காணிப்பு சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டனர்.

மரணத்தின் பின் லெப்டினன் கேர்ணல் ரஞ்சன் விஜேரெட்ன ஜெனரலாகப் பதவி உயர்வு பெற்றார்.

(நமது நிருபர்)

வேவு பார்த்தல் தொடர்பான ராஜீவின்

# கோரிக்கையை ஏற்காததாலேயே பதவி விலகவேண்டி வந்தது

- சந்திரசேகர்

(டில்லி)

ராஜீவ் காந்தியை வேவு பார்க்கும் பிரச்சினை தொடர்பாக, ஜனதா தள் எஸ். பொதுச்செயலாளர் ஓம்பிரகாஷ் சௌதாலா, ஹரியானா முதலமைச்சர், டில்லி துணைநிலை ஆளுநர் ஆகியோரை விலக்க வேண்டுமென்று இந்திரா காங்கிரஸ் கோரியதாக பதவி விலகிய இந்தியப் பிரதமர் சந்திரசேகர் குற்றஞ் சாட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் ஜனதா தள் எஸ் கட்சியின் பாராளுமன்றக் கட்சிக் கூட்டத்தில் பேசிய சந்திரசேகர் மேற்கண்டவாறு கூறினார்; அத்துடன் இந்தக் கோரிக்கை ஏற்கப்படாவிட்டால், ஹரியானா உள்துறை அமைச்சர் சம்பத் சிங்கையாவது பதவி நீக்கம் செய்ய வேண்டுமென்று இந்திரா காங்கிரஸ் கட்சி கோரியதாகவும் அவர் கூறினார்.

அவர்களது கோரிக்கையை ஏற்காது விட்டதாலேயே அவர்கள் பாராளுமன்ற கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை என்றும் அவர் கூறினார்.

அதேவேளை ஜனாதிபதியின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற முடியாததால் தாம் பதவி விலகியதாக நேற்று முன்தினம் மக்களுக்கு வானொலி மூலம் உரையாற்றிய அவர் குறிப்பிட்டார். மேலும் அவர் தீர்மானம் நிறைவேற்ற முடியாமைக்கு தமது அரசாங்கத்திற்கு ஆதரவு அளித்து வந்த இந்திரா காங்கிரஸ் கட்சியே பொறுப்பாகும் என்று குறிப்பிட்டார்.

இப்போதுள்ள குழப்பமான நிலையில் ராஜினாமாச் செய்வதைத் தவிர தனக்கு வேறு வழியில்லை என்றும், இந்த நிலையில் மக்களை நாடுவதைத் தவிர வழியேதும் தமக்கு தெரியவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

## கட்டடத்தை மதிப்பீடுசெய்ய பொறியியலாளர் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரிலுள்ள ஒரு கட்டடத்தை மதிப்பீடு செய்து அது எவ்வளவுக்கு உகந்தது? எவ்வளவு காலத்திற்குப் பாவிக்கக்கூடியது என்பதை அறிந்து கொள்வதற்கு எந்த ஒரு கட்டடப் பொறியியல் நிபுணரேனும் இல்லையெனக் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் பிராந்திய மக்கள் வங்கியின் தலைமைக் காரியாலயமாகச் செயற்பட்டுவந்த பிரதான வீதியில் உள்ள வங்கிக் கட்டடம் மீண்டும் தமது செயற்பாடுகளை அதே கட்டடத்திற்கு மாற்றத் தீர்மானித்துள்ளபோதிலும், அக்கட்டடத்தின் தராதரத்தை அறிவதற்கு யாழ் மாவட்டத்தில் எங்கும் சகல தகைமைகளையும் கொண்ட ஒரு உத்தரவு பெற்ற கட்டடப் பொறியியலாளரும் இல்லையென மக்கள் வங்கியின் பிரதிப் பிராந்திய முகாமையாளர் நமது நிருபரிடம் கவலை தெரிவித்திருக்கிறார். (லோ)

## வடக்கு கிழக்கு பயிலுனருக்கு சம்பள உயர்வு கிடைக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

பயிலுனர் ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்பட்டதாக கல்வி அமைச்சு அறிவித்தபோதிலும் வடக்குக் கிழக்கு பயிலுனர் ஆசிரியர்களுக்கு இந்த அதிகரிப்பிற்கான முழுமையான கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை.

கடந்த ஆண்டு நவம்பர் முதல் இந்த ஆசிரியர்களுக்கு 300 ரூபா சம்பள உயர்வு வழங்கப்படுவதாக அறிவித்த போதிலும் இந்த ஆசிரியர்களுக்குரிய இந்த ஆண்டு பெப்ரவரி மாதத்திற்கான அதிகரித்த சம்பளக் கொடுப்பனவுகளுக்கே இந்தப் பிரதேசக் கல்வித் திணைக்களங்களுக்கு கட்டுநிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏனைய மாதங்களுக்குரிய சம்பளக் கொடுப்பனவுகள் வழங்குவதற்கு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. (ச)

## பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தில் தேசிய அடையாள அட்டைகளும் காசோலையும் கண்டெடுத்து ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவற்றின் இலக்கங்கள் வருமாறு:

2565214V, JM013364, 725110631V, 710492590V, 632710V ஆகிய அடையாள அட்டைகளும், இல 2275 இலக்கமுடைய திருமதி எம். பொன்னையா என்ற பெயரிட்ட காசோலையும் அடங்கும். (லோ)

*சீனத் தயாரிப்புப்*

சிறிலங்கா கடற்படையிடம் உள்ளன.

கொழும்பு டொக்யாட்டில் 15 லட்சம் அமெரிக்க டொலர் செலவில் ஒரு படகு கட்டப்படவுள்ளது.

*மன்னார்*

அதிபர்கள் மாணவர்களால் மேற்படி கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளதாக இ. த. ஆ. சங்கப் பொதுச் செயலர் மகாலிங்கம் விடுத்துள்ள பத்திரிகைச் செய்திக்குறிப்பு ஒன்று தெரிவிக்கின்றது. மேற்படி ஆசிரியர், மாணவர்களால் விடப்பட்ட கோரிக்கையை அடுத்து இ. த. ஆ. சங்கமும் பரீட்சை ஆணையாளரிடம் இக்கோரிக்கையை விடுத்துள்ளதாகவும் அச்செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

பரீட்சை வேலைகளில் ஈடுபட்டிருக்கும் ஆசிரியர்கள், அதிபர்கள் இராணுவக் கெடுபிடி நிறைந்த மன்னார் தீவுக்கும், வவுனியா நகருக்கும் சென்று வருவதென்பது முடியாத காரியம் என்று சங்கத்தின் பொதுச் செயலர் பரீட்சை ஆணையாளருக்கு அனுப்பிய மகஜரில் குறிப்பிட்டுள்ளார்.

*கலந்தாலோசனைக் கூட்டம்*

(செ. த. மை)

செய்தி தகவல் மைய செய்தியாளர்களுக்கான கலந்தாலோசனைக் கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதன் செய்தியாளர் அனைவரையும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

*காங்கிரஸ்*

பிரதமர் ராஜீவ் காந்தி காபந்து அரசுத் தலைவராகப் பொறுப்பு ஏற்றால் நடக்கவிருக்கும் பாராளுமன்றம், மற்றும் சட்டசபைகளுக்கான தேர்தல் நியாயமானதாக நடக்காது எனத் தாம் கருதுவதாக தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.

*மக்கள் கொல்லப்பட்டமை*

ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்ட இரவப்பணம் எழுபதாயிரம் ரூபாவாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது என கூறினார். அத்துடன் கூட்டுறவுச் சங்க பணியாளர்களுக்கான அபாய நிதிக் கொடுப்பனவிற்கும் தாம் அங்கீகாரம் பெற்றுவிட்டதாகவும் இப்பொழுது இந்த அங்கீகாரம் திறைசேரியின் கவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனவும் அரச அதிபர் கூறியதாக நித்தியராஜ் தெரிவித்தார்.

இதுதவிர வவுனியாவில் இருந்து தனியார், கூட்டுறவுச் சங்கங்கள் அத்தியாவசிய உணவுப்பொருட்களைக் கொண்டு வருவதற்கு முக்கூட்டுப்படைத் தலைமையகமும், உணவு ஆணையாளரும் அங்கீகரித்து விட்டதாகவும் அரச அதிபர் கூறினார்.

அத்துடன் மண்ணெண்ணெயைக் கொழும்பிலிருந்து தனியாரும், கூட்டுறவுச் சங்கத்தினரும் கொண்டுவருவதற்கும் அங்கீகாரம் பெற்றுள்ளதாகவும் அரசஅதிபர் கூறியதுடன், வடபகுதிக்குக் கொண்டுவரப்படும் மண்ணெண்ணெய் யாழ் அரச அதிபர் அலுவலகத்தில் கணக்கிடப்பட்ட பின்னரே விற்பனைக்கு அனுமதிக்கப்படுமெனவும் அரச அதிபர் கூறியதாகப் பொதுசனத் தொடர்பு அதிகாரி நித்தியராஜ் மேலும் கூறினார்.

## அரபு - இஸ்ரேல் பிரச்சினை தீர்விற்கு காலம் வந்துவிட்டது

- ஜோர்ஜ் புஷ்

(வொஷிங்டன்)

"ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப் பகுதியில் இருந்து இஸ்ரேல் விலகவேண்டும். அமைதியோடு வாழ அந்தப் பகுதியில் உள்ள எல்லா நாடுகளுக்கும் உரிமை உண்டு என்று அறிவிக்க வேண்டும்" என அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் இஸ்ரேலைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

அமெரிக்கப் பாராளுமன்றத்தின் கலப்புக் கூட்டத்தில் பேசிய ஜோர்ஜ் புஷ் அரபு-இஸ்ரேல் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டிய நேரம் வந்தது என்று குறிப்பிட்டு இஸ்ரேலிடம் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்தில் இருந்து விலகவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

நீண்ட காலமாகத் தீர்க்கப்படாத மேற்காசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் ஜோர்ஜ் புஷ் குறிப்பிட்டார்.

அமைதி காண்பதற்கு விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை தேவையென்றும் அவர் குறிப்பிட்டார். ஜோர்ஜ் புஷ்ஷின் அறிவிப்பை பிரான்ஸ் ஜனாதிபதி மித்திரோனும் பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத்தும் வரவேற்றுள்ளனர்.

இதேநேரம் அரபு-இஸ்ரேல் பிரச்சினையை முடிவிற்கு கொண்டு வரவேண்டும் என்ற ஜோர்ஜ் புஷ்ஷின் கூற்றை "மகிழ்ச்சிகரமான ஒருகூற்று" என இஸ்ரேலின் வெளியுறவு அமைச்சர் கூறியுள்ளார்.

## சர்வதேச மாநாடு கூட காலம்இன்னும் வரவில்லை

- யேம்ஸ் பேகர்

(றியாட்)

மேற்கு ஆசியா தொடர்பான சர்வதேச சமாதான மகாநாட்டைக் கூட்டுவதற்கான காலம் வரவில்லை என்று ஆறு மேற்கு ஆசிய நாடுகளுக்கான அரசமுறைப் பயணமொன்றை மேற்கொண்டு சவூதி அரேபியா வந்துள்ள அமெரிக்க ராஜாங்க செயலாளர் யேம்ஸ் பேகர் தெரிவித்தார்.

அரபு-இஸ்ரேல் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் சர்வதேச மகாநாடு ஒன்றைக் கூட்டுவதற்கான சமயம் நெருங்கிவிட்டது என்று அமெரிக்க ஜனாதிபதி புஷ் நேற்று முன்தினம் அமெரிக்க காங்கிரஸில் உரையாற்றும்போது கூறினார்.

யேம்ஸ் பேகரின் பேச்சு, அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷின் கருத்துக்கு நேர்மாறாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## குடிமனை மீது ஷெல் தாக்குதல்

ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து நேற்றிரவு எட்டுமணி தொடக்கம் பொது மக்கள் குடியிருப்புக்களை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதே நேரம் காரைநகர் கடற்படை முகாமில் இருந்தும் நேற்றைய தினம் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. (மு)

## நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித் திணைக்கள முறைசாராப் பிரிவினரால் நேற்றைய தினம் யாழ் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் ஆரம்பித்துவைக்கப்பட்ட கல்விக் கண்காட்சியும், விற்பனையும் மேலும் இரு தினங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. இக்கண்காட்சி இன்றும், நாளையும் காலை 9 மணியில் இருந்து மாலை 5 மணிவரை தொடர்ந்து நடைபெறுமென முறைசாரா கல்விப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (மு)

*இடம் பெயர்ந்த*

டத்தில் எடுக்க விரும்பும் பரீட்சை நிலையம் ஆகியவற்றைக் கொண்ட ஒரு கடிதம் தயாரித்து பரீட்சை ஆணையாளர், கொழும்பு கல்வித் திணைக்களம் என விலாசமிட்டு அனுப்பி வைக்கும்படி யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தாம் தெரிவுசெய்த பரீட்சை நிலையம், பதிவு செய்த தபாலகம், பதிவுத் தபால் ரசீது இலக்கம் ஆகியவற்றையும் சேர்த்து அனுப்பி வைக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

அத்துடன் விரைவில் யு.என்.எச்.சீ.ஆர். ஊடாக வரவிருக்கும் ரேடியோ செய்தியில் பரீட்சை திகதிகளும் சாதாரணதர பரீட்சை பற்றிய விபரமும் வெளிவரும் என பணிப்பாளர் கூறினார்.

90ஆம் ஆண்டு உயர்தர பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் பற்றி குறிப்பிட்ட வேளையில் கல்வி அமைச்சுக்கு அனுப்பப்படும் பரீட்சை நிலைய மாற்றக் கடிதம் யாழ் கல்வித் திணைக்களத்திற்கும் ஒரு பிரதி அனுப்பப்பட வேண்டும் என்றார். (லோ)

*சிறிலங்காவில்*

என்று தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

ஆனால் வடக்குக் கிழக்கில் தேர்தல்கள் வைப்பதற்குரிய சூழ்நிலை உருவாகவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

257 நகர, கிராம மன்றங்களுக்கான இடங்களுக்கு தேர்தல்கள் நடைபெறும் என்றும் வேட்புமனுக்கள் இந்த மாதம் 21ஆம் திகதியில் இருந்து 28ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

*பேச்சுவார்த்தை*

பெற்று அதிகாரத்திற்கு வருவதற்கு இன்னமும் வாய்ப்புக்கள் உண்டு எனவும் அவர் குறிப்பிட்டார்.

பிரதமராகவும், நிதிஅமைச்சராகவும் கடமையாற்றிவரும் இவர், ரஞ்சன் விஜேரட்னாவின் மறைவைத் தொடர்ந்து பாதுகாப்பு இணை அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

*குண்டு வீச்சைத்*

போட்டி நடைபெறுகிறது: பொதுக்கூட்டமல்ல" என்று குறிப்பிட்டாராம். பின்பு ஆசிரியை ஒருவர் அனைவரையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துக் குறிப்பிட்டார். இவர்கள் இருவரும் உயர்தர வகுப்பு ஆசிரியர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பின்னர் பொம்மர் சென்றதும் தங்களது வேண்டுகோளுக்கு இணங்கவே தாக்குதல் மேற்கொள்ளப்படவில்லை என்று அந்த இரு ஆசிரியர்களும் பெருமைப்பட்டுக்கொண்டார்களாம்.

*வீதி விபத்துக்கள் அதிகரிப்பு*

*கடத்தப்பட்டவர் விடுவிக்கப்பட்டார்*

(ஸ்ரீநகர்)

ஜம்மு காஷ்மீரில் சென்ற மாதம் 27ஆம் திகதி கடத்திச் செல்லப்பட்ட பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி நகிட் விடுவிக்கப்பட்டார்.

நேற்றுக் காலை ஸ்ரீநகரில் உள்ள அவரது தந்தையான பாராளுமன்ற உறுப்பினர் சைபுதீன் சோஸ் வீட்டில் அவர் விடுவிக்கப்பட்டார்.

கடத்திச்சென்றவர்களுடன் நடுவர்கள் மூலமாக மாநில அரசாங்கம் பேச்சு நடாத்தியதன் பின்பு திருமதி நகிட் விடுதலை செய்யப்பட்டார் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

## வீதி விபத்துக்கள் அதிகரிப்பு

யாழ் மாவட்டத்தில் அண்மைக்காலமாக வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளன. யாழ். போதனா வைத்தியசாலைக்கு நேற்றுமட்டும் நான்கு பேர் வீதி விபத்தில் சிக்கி கொண்டுவரப்பட்டுள்ளனர். இதேபோல கடந்த பலநாட்களாக வீதி விபத்துகளே பெரும்பாலும் வந்திருப்பதை அவதானிக்க கூடியதாக உள்ளது. (லோ)

*இடைக்காலத்*

வெளிவரவில்லை. இரபத்தி நான்கு மணிநேரத்தில் லோக்சபை பற்றிய பிரகடனம் வெளியிடப்படும் என்று நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. நிதி மற்றும் சட்ட மூலங்களை லோக்சபை அங்கீகரிக்காமல், பிரதமர் சந்திரசேகர் ராஜினாமாச் செய்ததால் ஏற்பட்டுள்ள சட்டப் பிரச்சினைகள் குறித்து ராஷ்டிரபதி ஆர். வெங்கட்ராமன் அரசியல் சட்ட வல்லுநர்களுடன் ஆலோசிக்கிறார் என டில்லியிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்திரா காங்கிரஸ் உட்பட எல்லா எதிர்க் கட்சித் தலைவர்களும் இடைக்காலத் தேர்தல் ஒன்றை விரும்புகின்றனர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீது, 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.